2. விதி 110—ன்கீழ் அறிக்கை

மாவீரர் தீரன் சின்னமலைக்கு சங்ககிரியில் நினைவுச் சின்னம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள். Frontline leaders எல்லாம் இன்று பேசுகிறார்கள். அவர்களிடத்தில் சொல்லுங்கள், பேசுவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களையும், தன்னலமற்ற மக்கள் சேவை புரிந்தவர்களையும்; சமுதாயத்தில் மறுமலர்ச்சியை உருவாக்கப் பாடுபட்டவர்களையும்; மக்களின் உரிமைகளை மீட்கப் போராட்டங்களை நடத்தியவர்களையும் கௌரவிக்கும் விதத்தில் அவர்களுக்கு மணிமண்டபங்கள் அமைப்பதிலும்; திருவுருவச் சிலைகள் அமைப்பதிலும்; அரசுக் கட்டடங்களுக்கு அவர்களது பெயர்களை வைப்பதிலும்; முன்னோடியாக விளங்குவது எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)*

பரம்பரை பரம்பரையாய் அடிமைத் தளையில் சிக்குண்ட நம் இந்திய நாடு; தற்போது, உரிமை பெற்ற நாடாக விளங்குகிறது. இச்சுதந்திரத்தைப் பெற இந்திய விடுதலைப் போரில் எண்ணற்ற தியாக சீலர்கள் கிளர்ந்து எழுந்து; தங்கள் வாழ்வை துச்சமென மதித்து; அன்னை பாரதத்தின் அடிமைத் தளையை தகர்த்தெறியப் பாடுபட்டனர். இத்தகைய விடுதலைப் போரில்; தமிழகத்திலும் பல தலைவர்கள் தோன்றி தங்கள் இன்னுயிரை ஈந்தனர். இந்த விடுதலைப் போராட்டத்தில்; பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல்; ஆர்ப்பரித்து; ஆங்கிலேய ஆதிக்கத்தைத் தடுக்கும் பெருமலையாக விளங்கியவர் மாவீரர் தீரன் சின்னமலை அவர்கள்.

சென்னிமலைக்கும், சிவன்மலைக்கும் நடுவே வாழ்ந்து; தனக்கென ஒரு பாதை அமைத்து; ஆங்கிலேயருக்கு சிம்ம

சொப்பனமாக விளங்கிய மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில்; தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

எனது ஆட்சிக்காலத்தில், சென்னை, அண்ணா சாலையில், தீரன் சின்னமலை அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டதோடு, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பணிக்கு ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடையையும் நான் அளித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1995 ஆம் ஆண்டு தீரன் சின்னமலை அவர்களுக்கு, தமிழக அரசின் சார்பில், காங்கேயத்தில் நினைவு விழா நடத்தப்பட்டு, அவ்விழாவில் அவரது வாரிசுகள் கௌரவிக்கப்பட்டனர்.

எனது ஆட்சிக்காலத்தில்தான், கொங்கு நாட்டின் ஒரு பகுதியான கரூரைத் தலைநகராகக் கொண்டு தீரன் சின்னமலை மாவட்டம் உருவாக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தீரன் சின்னமலை அவர்கள் பிறந்த இடமான ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் அவரது நினைவு நாளான ஆடி மாதம் *18* ஆம் நாளினை அரசு விழாவாக அனுசரிக்க, *2003* ஆம் ஆண்டு நான் உத்தரவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) தியாகி தீரன் சின்னமலை அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், *30* இலட்சம் ரூபாய் செலவில், ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலையில் மணிமண்டபம் என்னால் *2006* ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

தியாகி தீரன் சின்னமலையைப் போரின்மூலம் வெல்ல முடியாது என்ற நிலைக்கு வந்த ஆங்கிலேயர், சூழ்ச்சிமூலம் அவரைக் கைது செய்து, சங்ககிரி கோட்டைக்கு அழைத்துச் சென்று தூக்கிலிட்டனர். மாவீரர் தீரன் சின்னமலையைத் தூக்கிலிட்ட இடமான சங்ககிரியில், அவருக்கு நினைவுச் சின்னம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர் திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள் *30* மார்ச், *2012* அன்று இந்த மாமன்றத்திலே கோரிக்கை வைத்தார்.

முற்பகல் *11–10*

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக, விடுதலைக்காக, நன்மைக்காக பாடுபட்ட நல்லோர் அனைவருக்கும் தனது நன்றியறிதலைக்

காட்டிவரும் அரசு, எங்கள் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உணர்வின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாவீரர் தீரன் சின்னமலை அவர்களுக்கு, அவர் தூக்கில் இடப்பட்ட இடமான சங்ககிரியில் நினைவுச் சின்னம் விரைவில் அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் இந்த முடிவை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மனதார வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையினைத் தெரிவித்து, இந்த நினைவுச் சின்னம் அமைப்பதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023 குறித்த முதலமைச்சரின் விளக்கம்

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது நடைபெற்றுவரும் 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023" குறித்தும் சில உறுப்பினர்கள் பேசியுள்ளார்கள்.

குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் 2023 தொலைநோக்குத் திட்டத்தில், தற்போதைய தனி நபர் வருமானம் ரூபாய் 73,278 என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றும்; அடுத்த 10 வருடங்களில் மக்கள்தொகை வளர்ச்சி 15 சதவீதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றும்; எனவே, மொத்த உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஒவ்வொரு வருடமும் 24 சதவீதத்திற்குமேல் இருந்தால்தான் 2023 ஆம் ஆண்டு தனி நபர் வருமானம் ரூபாய் 4½ இலட்சத்தைத் தாண்ட முடியும் என்றும்; தொலைநோக்குத் திட்ட அறிக்கையில் சொல்லப்பட்டபடி 11 சதவீதம் வளர்ச்சி இருந்தால், தனி நபர் வருமானம் ரூபாய் இரண்டு இலட்சத்தைத்தான் அடைய முடியும் என்றும் சொல்லியுள்ளார். அதைப்போன்று, சேவைத் துறையில் ஏற்கெனவே தமிழ்நாடு 12 முதல் 15 சதவீதம் வரை வளர்ந்து கொண்டிருக்கும்பொழுது, அடுத்த 11 வருடங்களில் சேவைத் துறை வளர்ச்சி விகிதம் 11 சதவீதமாகக் குறைப்பது சாத்தியமற்றது என்றும் கூறியுள்ளார்.